# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை — 2026

க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை 10 ஆம் திகதி ஆகஸ்ட் மாதம் 2026 தொடக்கம் 05 ஆம் திகதி செப்டெம்பர் மாதம் 2026 வரை நடைபெறவுள்ளன என்பதை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலை விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகள் பாடசாலைகளுக்குரிய வலயக் கல்வி அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், சகல அதிபர்களும் தமது பாடசாலைக்குரிய வலய கல்வி அலுவலகங்களிலுள்ள பரீட்சைக்குப் பொறுப்பான உதவி / பிரதி கல்வி பணிப்பாளரிடம் அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும். எந்த தாமதமுமின்றி பாடசாலை விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகளை அவர்களுக்கு உடனடியாக பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்.

க.பொ.த. (உ.தர)ப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தனிப்பட்ட விண்ணப்பதாரர்களின் அனுமதி அட்டைகள் அவர்களின் தனிப்பட்ட முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை விண்ணப்பதாரிகளின் தமது அனுமதி அட்டைகளை தத்தமது பாடசாலை ஊடாகவும் தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் தமது அனுமதி அட்டைகளை தாமே 24.07.2026 தொடக்கம் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தளமான www.doenets.lk இற்குள் நுழைந்து அனுமதி அட்டைகளை தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

க.பொ.த. (உ.தர)ப் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத அல்லது அனுமதி அட்டையை தரவிறக்கம் செய்ய முடியாத தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தங்களால் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் நிழற்பிரதி அல்லது பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்காக அஞ்சல் அதிபரினால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்திய கடிதம் ஆகியவற்றுடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு வருகைதரல் வேண்டும்.

அதிபருக்கோ அல்லது தனிப்பட்ட விண்ணப்பதாரிக்கோ கிடைக்கப்பெற்றுள்ள அனுமதி அட்டையிலுள்ள பாடம், மொழிமூலம், பெயர் என்பவற்றில் திருத்தம் மேற்கொள்ள வேண்டியிருப்பின்,

- **சகல திருத்தங்களும் நிகழ்நிலையூடாக மேற்கொள்வதுடன் அதற்காக https://onlineexams.gov.lk/eic எனும் இணையதளத்தினுள் நுழைய வேண்டும்.**
- **ஒரு திருத்தமொன்றை ஒரு தடவை மட்டுமே மேற்கொள்ள முடியும்.**
- **இப் பரீட்சைகளுக்குரிய பரீட்சை நிலையங்களை மாற்றம் செய்ய முடியாது.**
- **திருத்தங்களை மேற்கொள்ளுதல் 03.08.2026 நள்ளிரவு 12.00 மணியுடன் நிறைவுபெறும்.**

பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் இப் பரீட்சைக்குச் செல்லுபடியான ஆளடையாள அட்டையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

1. ஒரு பரீட்சார்த்திக்குப் பதிலாக வேறொருவர் பரீட்சைக்குத் தோற்றுதல், குறிப்புக்களை தம்வசம் வைத்துக்கொண்டு விடையளித்தல், மற்றைய பரீட்சார்த்திகளின் உதவியைப் பெறுதல், உதவியளித்தல், பரீட்சை மண்டபத்திலும் அதற்கு வெளியிலும் முறைகேடாக நடந்து கொள்ளல் என்பன பரீட்சை சட்டத்துக்கமைய தண்டனைக்குரிய குற்றமாகும்.
2. க.பொ.த. (உ.தர)ப் பரீட்சையின் கணக்கீடு, பொறிமுறைத் தொழில்நுட்பவியல், உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு மட்டும் நிரற்படுத்தப்படாத சாதாரண கணித்தற் பொறிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
3. தற்போது ஏதாவது அரசாங்கப் பாடசாலையில் கல்வி கற்கும் ஒருவர் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக பரீட்சைக்குத் தோற்றுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.
4. பரீட்சை மண்டபத்திற்குள் கையடக்கத் தொலைபேசி, ஸ்மார்ட் கைக்கடிகாரம், இலத்திரனியல் உபகரணங்களை எடுத்துச்செல்லுதல், தம்வசம் வைத்திருத்தல், பயன்படுத்துதல் என்பன முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறான விதிகளை மீறுபவர்களுக்கு 5 வருடங்களுக்கு பரீட்சைகளுக்கு தடைவிதிக்கப்படுவதுடன் அவ்வாறான இலத்திரனியல் கருவிகள் அரசாங்கத்தினால் பறிமுதலும் செய்யப்படும்.
5. பரீட்சார்த்திகள் (Bluetooth) போன்ற இலத்திரனியல் உபகரணங்கள் / கருவிகள் (Electronic Communication Devices) பயன்படுத்தாதிருப்பதை உறுதி செய்வதற்காக பரீட்சை மண்டபத்தில் பரீட்சை நேரம் முழுவதும் தமது முகமும் இரு காதுகளும் திறந்தபடி தெளிவாகத் தெரியுமாறு இருத்தல் வேண்டும். இவ்வாறான பரீட்சை விதிகளுக்குட்படாத பரீட்சார்த்திகள் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**விசாரணைகள் :-**

| | |
|---|---|
| தொலைபேசி எண்கள் | : 011-2784537, 011-2784208, 011-2786616 |
| மின்னஞ்சல் முகவரி | : gcealexam@gmail.com |
| தொலைநகல் இலக்கம் | : 011-2784422 |
| நேரடி அழைப்பு எண் | : 1911 |
| தபால் முகவரி | : பரீட்சை ஆணையாளர், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்ல. |

**பரீட்சைக் காலம் முழுவதும் 24 மணித்தியாலங்களும் செயற்படும் அலகின் அழைப்பு இலக்கங்கள்:**

0112785211, 0112784208, 0112784537, 0112786616
உடனடி அழைப்பு இலக்கம் 1911

**6/3/AL/2026**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**பெலவத்தை, பத்தரமுல்ல**
**2026.07.24 ஆம் திகதி**

**ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**